1982 மார்ச் 25]

எங்கே பெட்ரூம் கட்டலாம், எங்கே கிச்சன் கட்டலாம், மேல் மாடி எங்கே கட்டலாம் நிலவை எங்கிருந்து பார்க்கலாம் என்று பல்வேறு எண்ணம் எல்லாம் ஏற்படுகின்றது. ஆகவே கவனத்தோடு இந்த வீட்டுமனைகளை வாங்கினால் தான் இந்த நிலைமைகளைத் தவிர்க்க முடியும்.

ஈரோடு நகரை அழகு படுத்தும் திட்டம்.

*வினா எண். 651—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரிலுள்ள சாலைகளை அகலப்படுத்தி ஈரோடு நகரை அழகுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சி தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்திலே மணிக்கூண்டு பகுதியிலே தண்ணீர் தேங்கி அடிக்கடி அங்கே சாலைகள் பழுதடைந்து விடுகின்றது. அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த மணிக்கூண்டு பகுதியில் போக்குவரத்து இடைஞ்சலாக இருந்து தொல்லையாக இருக்கின்றது. எனவே குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உள்ள சாலையை கான்கிரீட் சாலையாக மாற்ற ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலை ஈரோட்டில் இருப்பது எனக்குத் தெரியும். அவைகளைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. அங்கே இருக்கக் கூடிய பாலம் தரைமட்டம் பாலம் தான். அதை மேல்மட்டப்பாலமாக ஆக்கினால்தான் அங்கே தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க முடியும். ஈரோட்டைப் பொருத்த வரையில் இந்த ஆண்டிலே மட்டும் 9 சாலைகளை சீர்திருத்தி செம்மைப்படுத்த ஏறத்தாழ 1 கோடி ரூபாயில் நகராட்சியினால் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. பல்வேறு இடங்களில்

[1982 மார்ச் 25

திட்டுக்கள் , பூங்காக்கள், நீர் ஊற்றுகள் போன்றவைகளை அமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஈரோடு பெரியார் மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு பணிகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த நகராட்சி அதற்காக திட்டங்களை வகுத்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஈரோடு பெரியார் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் அங்கே பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் அடிக்கடி வந்துபோவதால், அங்கே போக்குவரத்து நெரிசல் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அங்கு தற்போது பிரதான சாலைகளில் மட்டும்தான் சோடியம் வேப்பர் விளக்குகள் போடப்பட்டுள்ளன. நகரத்திலே உள்ள எல்லா தெருக்களிலும் இந்த சோடியம் வேப்பர் விளக்குகளை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சோடியம் வேப்பர் ஆவி விளக்குகளை நாம் போடுவதினுடைய நோக்கமே., சாலைப் போக்குவரத்து எங்கு அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதியிலே மட்டும் விளக்குகளை போடவேண்டுமென்று ஒரு குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் எந்தவிதமான விபத்துக்களும் ஏற்படாமல் தடுப்பதற்காகவும், மழைக் காலங்களில் தெருக்கள் சுத்தமாக மழை பெய்தாலும் கூட வாகனங்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல்கள் இல்லாமல் வருகின்ற காரணத்தினால்தான், சோடியம் ஆவி விளக்குகளை அதிகமாக உபயோகிக்க வேண்டுமென்ற ஒரு குறிப்பு சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, எல்லா சாலைகளுக்கும், சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவது என்பது இயலாத காரியம். ஒரு சோடியம் ஆவி விளக்கின் விலை ஏறக்குறைய 4,500-லிருந்து 5,000 ரூபாய் வரையில் விலையாகிறது. ஆகவே எல்லா இடத்திலும் அந்த விளக்குகளைப் போடுவது என்று சொன்னால் நிதிநிலைமை சரியாக இருக்காது.

பாலக்கரையிலிருந்து நல்லாம்பட்டி செல்ல புதிய சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 652—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை ஒன்றியம் பாலக்கரையிலிருந்து நல்லாம்பட்டி செல்ல புதிய ரோடு போட ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டும் வேலை நடைபெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?